**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 67/2018 | வா.சா. | : 1 |
| பெயர் | : கோச்சடை | த/பெ. | : ஆண்டிச்சாமி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : வேம்பரளி |
| தேதி | : 15.07.2023 | வயது | : 54/2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் மொக்கழகன் மகன் மெய்யழகன் என்ற துரைச்சாமி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கும் சமயம் வில்லங்க சான்று, பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் புல வரைபடம் ஆகியவற்றை சரிபார்த்தேனா என்றால் இல்லை. நான் சொத்தை கிரையம் வாங்கும்போது கூட்டு பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். யார் யார் பெயரில் கூட்டு பட்டா இருந்தது என்றால் அழகன், மொக்கழகன், மூக்கன் ஆகியோர் பெயரில் இருந்தது. மேற்படி மூன்று நபர்களுக்குள் உள்ள உறவுமுறை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மெய்யன் சோலை என்பவரின் மகன்கள் தான் மேற்கண்ட மூன்று நபர்களும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 197/2ற்கு கட்டுப்பட்டது 15 சென்ட் ஆகும். மேற்படி 15 சென்ட் விஸ்தீரண சொத்தானது மேற்படி மூன்று அண்ணன், தம்பிகளுக்கும் பாத்தியமானது என்றால் சரிதான். அவர்களுக்குள் மேற்படி சொத்து குறித்து பாகப்பிரிவினை நடந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) நான் கிரையம் வாங்கிய பத்திரத்தில் மேற்படி 15 சென்ட்டில் வடபுறம் உள்ள 3–¾ சென்டை கிரையம் வாங்கியதாக வாசகங்கள் இல்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறான நான்குமால்கள் எனது கிரைய பாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 15 சென்ட் நிலம் ஆனது செவ்வக வடிவில் உள்ளது. நான் கிரையம் வாங்கிய நபருக்கு சொத்தில் எவ்வளவு

சொத்து, எந்த பகுதியில் பாத்தியம் என்ற விபரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது முன்பாத்தியஸ்தருக்கு பாகம் பிரிக்கப்பட்டது தொடர்பான ஆவணங்கள் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது முன்பாத்தியஸ்தருக்கு பாகம் இல்லாத அதிக விஸ்தீரணத்தில் என்ன சொத்தை நான் கிரைய பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்பதால் எனது கிரைய பத்திரம் செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 15.07.2023 கையெழுத்து செய்துள்ளார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.07.15 13:16:17 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

□